**அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி**

**பேராவூரணி - 614804.**

**பண்டைய இலக்கியம்**

III BA பாடக் குறியீட்டு எண்:16ACCTA13

**பகுதி-அ**

**அ.அனைத்து வினாக்களுக்கும் விடையளி**

1.எட்டுத்தொகை நூலில் இடம்பெற்றுள்ள அகநூல்கள் எத்தனை?

ஐந்து அகநூல்கள் உள்ளன.

2.நற்றிணைக்கு வழங்கும் வேறு பெயர் என்ன?

நற்றிணை நானூறு என்பதாகும்.

3.கலித்தொகையில் மருதக்கலியைப் பாடியவர் யார்?

மருதன் இளநாகனார்

4.சேர அரசர்களை மட்டும் பாடும் நூல் எது?

பதிற்றுப்பத்து எனும் நூல் ஆகும்.

5.எட்டுத்தொகைக்கு வழங்கும் வேறு பெயர் யாது?

தொகை நூல்

6.பாடாண் திணை பெயர்க்காரணம் தருக.

பாடக்கூடிய ஆண்மகனின் ஒழுகலாறுகளைப் பற்றி பாடுவது.

7.ஐங்குறுநூறு நூலில் முல்லைத் திணையைப் பாடியவர் யார்?

பேயனார் ஆவார்.

8.குறுந்தொகைக்கு உரை எழுதியவர் யார்?

அ.தெட்சிணாமூர்த்தி என்பவர் ஆவார்.

9.அகநானூறு நூலின் வேறு பெயர்கள் யாவை?

நெடுந்தொகை, அறிவுப் பெட்டகம்

10.பதிற்றுப் பத்து நூலுக்கு உரை எழுதியவர் யார்?

உ.வே.சாமிநாதையர் ஆவார்.

**பகுதி - ஆ**

**ஆ.அனைத்து வினாக்களுக்கும் ஒருபக்க அளவில் விடையளி**

**11.அ.ஐங்குறுநூறு பற்றிக் குறிப்பு வரைக.**

ஐங்குறுநூறு தொகுத்தவர் புலத்துறை முற்றிய கூடலூர்க் கிழார் ஆவார்.தொகுப்பித்தோர் யானைக்கட்சேய் மாந்தரஞ் சேரல் இரும்பொறை என்பவர் ஆவார்.**ஐங்குறுநூறு திணைகள் :**

**குறிஞ்சி - கபிலர்**

**முல்லை - பேயனார்**

**மருதம் - ஓரம்போகியார்**

**நெய்தல் அம்மூவனார்**

**பாலை - ஓதலாந்தையார்**

ஐங்குறு நூறு அகவற்பாவைச் சார்ந்தது.

ஆ.கலித்தொகையின் பாலைக் கலியில் வரும் கவின் தொலைதல் அஞ்சினான் விளக்குக.

**தொடங்கற்கண் தோன்றிய முதியவன் முதலாக...**

பொருள் தேடும் நினைவால் தன் மனைவியைப் பிரிந்து செல்ல நினைத்தான் ஒருவன் .அவன் மனைவியின் தோழி அதனை அறிந்தாள்.அவன் செல்வதால் விளையும் பயனிலும் செல்லாதிருப்பதே சிறந்தது என உரைத்தாள்.

நான்முகன் முதலாக தேவர் பலரும் சென்று வேண்ட சினத்துடன் சென்று முப்புரங்களையும் எரிக்க சிரித்த சிவனின் முகம் போல கதிரவன் தீப்பிழம்பாக்கி சுடுகின்றன.இவ்வாறு பாலை நிலத்தின் தன்மையை எண்ணி தோழி தலைவன் செல்லாதிருத்தலே நலன் என்று கூறுகின்றாள்.

**12.அ.பதிற்றுப்பத்து பற்றி விளக்கி வரைக.**

இந்நூல் பத்து சேர மன்னர்களைப் பற்றி பாடிய ஒரு வரலாற்று நூல் ஆகும். உ.வே.சாமிநாதையரால் உரை எழுதப்பட்டு 1904 ஆம் ஆண்டு வெளியிடப்பட்டது.இது எட்டுத்தொகை நூல்களுள் ஒன்றாகும்.புறப்பொருள் சார்ந்த நூல் ஆகும்.

**ஆ.பதிற்றுப்பத்து நூலில் இரண்டாம்பத்தில் உள்ள மறம் வீங்கு பல்புகழ் விளக்குக.**

**மறயர் வீழுவாளரின் மயக்கி...**

வயவர் வலிமை பொருட்டாய உரிச்சொல்லடியாக பிறந்தபெயர் எனவே இவர் தமது வலியார் பல போர்களைச் செய்து வெற்றி பெற்ற வீருடையராதல் ஆவார்.

**இடங்கவர் கடும்பி னரசுதலை பனிப்ப...**

இத்தகையாருடன் போர் புரிவதே ஆண்மைக்கு சிறப்பே.இருதிறத்து வீரரும் தம் வாட்படையால் தம் தொழில் அறிந்து தோன்றப் பொருதலின் அப்போரை வாளரில் என்றுரைப்பர்.இங்ஙனம் மறவர்களின் வீரத்தைப் பதிற்றுப் பத்து விளக்குகின்றது.

**13.அ.பரிபாடல் ஐந்திருள் அறநீக்கி என்னும் பாடலின் பொருள் தருக.**

**ஐந்திருள் அறநீக்கி நான்கினுள் துடைத்துத்தம்...**

ஐந்து பொறிகளால் உளதாகும் மயக்கவிருளை அகற்றி,மைத்திரி முதலிய நான்கானும் அகத்தைத் தூய்மை செய்து சமாதி ஆகிய ஒரு நெறியின் கண்ணே தம்மைச் செலுத்திய நின் அன்பர்கள் நின்னைத் தொழுது ஏத்தி நின் புகழை விரித்தோதினர்.

**ஒன்றாற்றுப் படுத்தநின் ஆர்வலர் தொழுதேத்தி...**

நின் திருமேனி நீலமணியையும் கடலையும், முகிலையும் ஒத்தது.அக்கரிய மேனியோடு முரணிய பொன்னாடையையும் உடையை; பகைவர் உயிருடன் மாறுபட் ஆழிப் படையை உடையவர்.

**13.ஆ.பரிபாடலின் சிறப்பை எடுத்தியம்புக.**

எட்டுத்தொகை நூல்களில் அகமும், புறமும் சார்ந்த ஒரே நூல் பரிபாடல் ஆகும்.ஓங்கு பரிபாடல் எனச் சிறப்பிக்கப்பெறும் இந்நூல் மதுரை, வையை திருமருதத்துறை, திருப்பரங்குன்றம், திருமாலிருஞ் சோலை போன்றவற்றின் பெருமைகளையும் இயற்கை எழிலையும் சிறப்பாக வருணிக்கின்றது.

அகப்பாடலும், புறப்பாடலும் கலந்து வருவதால் அகப்புறப்பொருள் என்ற பிரிவின் பரிபாடல் அடங்குகின்றது.

திருமால் : 1, 2, 3, 4, 13, 15

முருகன் : 5, 8, 9, 14, 17, 18, 19, 21

வையை : 6, 7, 10, 11, 12, 16, 20, 22

**14.அ.கலித்தொகை விளக்கி வரைக:**

எட்டுத்தொகை நூல்களுள் அகப்பொருள் சார்ந்த நூலாகும்.இந்நூலைக் கற்றறிந்தார் ஏத்தும் கலி என்று புலவர் பெருமக்கள் சிறப்போடு கூறுவர்.இதில் ஐந்து திணைகளைப் பற்றி கூறப்பட்டுள்ளது.இந்நூலுக்கு உச்சிமேற் புலவர்கள் நச்சினார்க்கினியர் உரை எழுதியுள்ளனர்.150 கலிப்பாவில் அமைந்த பாக்கள் உள்ளன.

**14.ஆ.புறநானூறு பற்றிக் குறிப்பு வரைக.**

157 புலவர்கள் பாடிய நானூறு பாக்களின் தொகுப்பே ஆகும்.ஆண்பாற் புலவர்கள் அல்லாமல், பெண்பாற் புலவர்களும் பாக்களை இயற்றியுள்ளமை குறிப்பிடத் தக்கச் செய்தி ஆகும். மாந்தரஞ் சேரல் இரும்பொறை என்ற சேர மன்னனைப் பாடிப் பரிசில் பெறுவோர் வேறு யாரிடமும் போய் பரிசில் பெற நிற்க வேண்டியது இல்லையாம். அவ்வளவு பரிசிலை அள்ளித் தருவானாம்.

**15.அ.கலித்தொகையில் உள்ள பாலைக் கலியின் அறன் இன்றி அயல் தூற்றும் பாடலின் பொருளை விளக்குக.**

**அறன் இன்றி அயல் தூற்றும் அம்பலை நாணியும்**
**வறன் நீந்தி நீ செல்லும் நீள்இடை நினைப்பவும்**

சிறிதேனும் அறம் என்பது இல்லாமல் பக்கத்தில் இருப்பவர் எல்லாரும் பழித்து பேசுவரே என்று நாணத்தால் குன்றிப் போவாள். தன் மனைவியைப் பிரிந்து பொருள் தேடுதற்கு செல்ல நினைத்தான் தலைவன் ஒருவன்.அதனால் அவன் மனைவி துயர் அடைவாள் என்று அறிந்தாள் தோழி.அவனிடம் பலவாறு கூறி அவனைப் போகவிடாது தடுத்து நிறுத்த முயன்றாள்.

**ஆ.குறுந்தொகையின் கான மஞ்ஞை என்ற பாடலின் பொருள் தருக.**

**கான மஞ்ஞை அறைஈன் முட்டை...**

தோழி! மயிலானது காடு செறிந்த பாதையிலே ஈன்ற முட்டைகளை கருங்குரங்கின் விளையாடும் குட்டியானது வெயிலிடத்தே உருட்டிவிடும் இயல்புடை மலைநாட்டனாகிய தலைவனது நட்பு என்றும் நன்மை உடையது.

மையுண்ணும் கண்கள் பெருக்குகின்ற நீரோடு ஒருபடியாக அவன் பிரிவும் அவனை நினையாமல் இருப்பதற்கான ஆற்றலை வன்மையாகப் பெற்றவர்கட்கே அது என்று நன்மையுடையதாகும்.

## பகுதி - இ

**அனைத்து வினாக்களுக்கும் கட்டுரை அளவில் விடையளிக்க.**

**16.பதிற்றுப்பத்து நூலில் உள்ள இரண்டாம் பத்தினை விவரி?**

பதிற்றுப்பத்தின் இரண்டாம் பத்தினை எழுதியவர் குமட்டூர்க் கண்ணனார் ஆவார்.

வரைமருள் புணரி வான்பிசி ருடைய
கடுஞ்சின விறல்வேள் களிறூர்ந் தாங்குச்...

மலைபோல் எழும் அலைகள் ,வெள்ளிய சிறுதுளிகளாக உடையுமாறு காற்றுப் பொந்து அடைக்கப்பட்டது.

ஒலியிட்ட அலையும் நிறைந்த நீரும் மிக்கப் பெரிய இடப் பரப்பும் உடைய கரிய கடற்குள் சென்றது.

**செவ்வா யெஃகம் விலங்குந ருறுப்ப ...**

கூரிய வாயினை உடைய வாட்படையானது எதிர்த்துக் குறுக்கிட்டு நிற்கும் பகைவரை அறுக்க அவரது அரிய மார்பு பிளத்தலால் உண்டாகிய புண்ணின் ஒழுகும் உதிரத்தால் ஆகும். நின்னுடைய பலரும் புகழும் செல்வச் சிறப்பினை யாம் இனிது காண்கிறோம்.

**17.நற்றிணை வழி முல்லைத் திணை மற்றும் பாலைத்திணை பாடல்களை எடுத்துரைக்க.**

**விரைப்பரி வருந்திய வீங்குசெலல் இளையர்...**

பொருள் தேடிய தலைவன் வழியில் சில காட்சிகளைக் காட்டி பாகனிடம் விரைந்து இல்லம் செல் எனக் கூறியது.

**பார்பக வீழ்ந்த வேருடை விழுகோட்டு ...**

பொருள் தேடச் செல்லும் தலைவனுக்கு தோழியும் தலைவி நின்றதை அறிந்த தலைவி உவந்து கூறுதல்.

**நோகோ யானே நெகிழ்ந்தன வளையே...**

தலைவியின் துயரைக் கூறித் தலைவன் பிரிவைத் தடுக்க நினைத்தது.

**நின்ற வேனில் உலந்த காந்தள்**

உடன்போக்குச் சென்ற மகளின் நிலை குறித்துத் தாய் கலங்கியது என் மகளுடைய தொய்யில் எழுதிய பருத்த இளம் முலைகள் நோகுமே என்று அணைத்திருந்த கையை நெகிழ்த்தேன்.

**18.குறுந்தொகையில் மருதத் திணை பாடல்களை விவரிக்க.**

**மன்னர் குழீஇய விழவினானும்...**

என்னைப் பிரிந்தத் தலைவனை என் குல மரபை மறந்து யான் யாண்டுசென்று தேடியும் காணேன் என்பதாம்.

**அன்னாய்! இவன்ஓர் இள மாணாக்கன்...**

வாயிலாக வந்த பாணனின் சொல்லாற்றலால் நான் சினத்தை மறந்தேன். அவன் சிறப்பானாக என்பதாம்.

**ஒறுப்ப ஓவலர் மறுப்ப தேறலர் ...**

இன்னாது கேட்டு கலங்கிய ஊரவர் இனி மணமங்கல ஒலியாகிய இன்னோசைக் கேட்டு இன்புறுமாறு நினக்குத் தலைவனுடைய மனம் உறுதியாயிற்று என்பதாம்.

காலை எழுந்து கடுந்தேர் பண்ணி...

தலைவி கற்பு அறம் பேணும் நற்குடியிற் பிறந்தவள் ஆதலால் தலைவனை ஏற்றுக்கொள்வாள் என்பதாம்.

**19.கலித்தொகையின் வழி பாலைக் கலியைப் பற்றிக் கூறுக.**

**தொடங்கற்கண் தோன்றிய முதியவன் முதலாக**
**அடங்காதார் மிடல் சாய அமரர் வந்து இரத்தலின்...**

பொருள் தேடும் நினைவால் தன் மனைவியைப் பிரிந்து செல்ல நினைத்தான் ஒருவன். அவன் மனைவியின் துயரைத் தோழி அறிந்தாள். அவன் செல்வதால்

விலையும் பயனிலும் செல்லாதிருப்பதே சிறப்பானது என்று தெளிவுப்படுத்தினாள். அவன் பணத்தை நிறுத்துகின்றான்.

**அறன்இன்றி அயல் தூற்றும் அம்பலை நாணியும்...**

**வலிமுன்பின் வல்லென்ற யாக்கை புலிநோக்கின்**

ஒருநாள் கூடும்போது வழக்கத்திற்கு மேலாக நின் செயல்கள் பேரன்பு காட்டுவனவாக இருந்தன. அதற்கே ஏன் நீ அவ்வாறு செய்தாய் என்று அவள் மனம் வருந்தினாள். நின்பால் அவ்வளவு ஈடுபாடு உடைய அவளை நீயும் பிரியலாமோ? அதை அவன் தாங்கிக் கொள்வானோ? என்று கூறி அவன் செலவினைத் தடுத்துநிறுத்த முயல்கின்றாள்.

**20.பரிபாடலின் வழி திருமாலின் சிறப்பைக் கூறுக.**

**ஐந்திருள் ............கிளப்ப ..**

ஐந்திருள் அறநீக்கி – செவி முதலிய ஐம்பொறிகளாலே உண்டாகும் மயக்கமாகிய இருளை துயர்களைந்து உள் நான்கின் துடைத்து உள்ளத்தை மைத்திரி முதலிய நான்கின் பயிற்சியால் தூயதாக்கி தம் ஒன்று ஆற்றுப்படுத்த நின் ஆர்வலர் தம்மை சமாதியாகிய ஒரே நெறியின் கண் செலுத்திய நின்னைத் தொழுது போற்றி நின்னுடைய புகழை விரித்து ஓதினர்.

**புருவத்து .....குன்றினோடொக்கும்...**

புருவத்துக் கருவல் கந்தத்தால் தாங்கி பண்டை நாளிலே இந்நிலம் வெள்ளத்தில் மூழ்கிய பொழுது நீ பன்றியாகி வன்மையுடைய கழுத்தாலேத் தாங்கி இவ்வுலகம் தந்து அடிபடுத்தது.

இவ்வுலகத்தை மேலே கொணர்ந்து திருத்திய செயல் நடுவண் ஓங்கிய பலர் புகழ் குன்றினோடு ஒக்கும் நிலத்தின் நடுவே நின்று அதனைத் தாங்கி உயர்ந்த பலராலும் புகழப்படும் மேருவின் செயலை ஒக்கும்.

Page - 1

# அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி
## பேராவூரணி –614804.
## புறப்பொருள் வெண்பாமாலை

தமிழ் மூன்றாமாண்டு
III BA TAMIL பாடக்குறியீடு : 16ACCTA15

1. ஐயனாரிதனார் பொருள் விளக்கம் தருக.

ஐயனார் என்னும் தெய்வத்திற்கு அன்பன் எனப்பொருள்படும்.

2. வெட்சிப் படலம் என்றால் என்ன?

ஆநிரை கவர வெட்சிப்பூவைச் சூடுவதாகும்.

3. கரந்தைப் படலத் துறைகள் எத்தனை?

கரந்தைப் படலத்துறைகள் மொத்தம் பதின்மூன்று உள்ளன.

4. அதரிடைச் செலவு என்றால் என்ன?

ஆநிரை கவர்ந்து சென்ற வெட்சியர் வழியில் செல்லுதல்.

5. குடைநிலை என்றால் என்ன?

பகைவர் நாட்டின் மீது படை எடுக்க முடிவு செய்த வஞ்சி மன்னன் முன்னதாகத் தன் வெண்கொற்றக் குடையைப் புற வீட்டுக்கு அனுப்புதல்.

6. மழபுல வஞ்சி என்றால் என்ன?

வேற்று நாட்டின்மீது படை எடுத்த வஞ்சிமறவர் அந்நாட்டிலுள்ள பொருள்களைக் கொள்ளையடித்தல்.

7. காஞ்சிப் படலம் என்றால் என்ன?

நாட்டைக் கவர வஞ்சிப்பூ சூடி வந்நவரைக் காஞ்சிப் சூடி எதிர்த்துப் போரிடுவதாகும்.

8. ஆஞ்சி காஞ்சி என்றால் என்ன? அதன் வகைகள் எத்தனை?

போரில் மடிந்த காஞ்சி வீரனை எரிக்கும் தீயில் அவன் மனைவியும் விழுந்து உயிரை விடுதல். வாளால் அவள் உயிரைப் போக்கிக் கொள்ளுதல் அதன் வகைகள் இரண்டு வகைப்படும்.

9.மறனுடைப் பாசி என்றால் என்ன?

மதிலைக் காக்க நொச்சி வீரர்கள் போராடி சுவர்க்கம் புகுதல்

10. குரிசில் பொருள் தருக.

குரிசில் என்னும் பொருள் தலைமைத் தன்மையன் என பொருள் படும்.

11. அ) புறப்பொருள் வெண்பாமாலை குறிப்பு வரைக.

| | |
|---|---|
| 1. ஆக்கியோன் பெயர் | : ஐயனாரிதனார் |
| 2. வழி | : பன்னிருபடலம், தொல்காப்பியம் |
| 3. எல்லை | : வடவேங்கம்–தென்குமரி ஆயிடைத் தமிழ் கூறு நல்லுலகம் |
| 4. நூற்பெயர் | : வெண்பாமலை |
| 5. யாப்பு | : தொகை, வகை, விரி |
| 6. கேட்போர் | : அகல் இடத்தார் |
| 7. பயன் | : தமிழகத்தார்க்குப் புறப்பொருளை விளங்க வைத்தல் |
| 8.காலம் | : கி.பி.9 ஆம் நூற்றாண்டு |
| 9. களம் | : சேரமரபினர் அவைக்களம் |
| 10. காரணம் | : புறப்பொருளின் வளர்ச்சியை வகுத்து உரைத்தல். |

14.அ) பேய்நிலை, பேய்க்காஞ்சி பற்றி விரித்து எழுதுக.

பேய்நிலை:

வஞ்சி மறவரால் விழுப்புண் பட்டு விழுந்த காஞ்சி வீரனை பிறர் வருந்தாதவாறு பேய் ஒன்று பாதுகாத்தல்.

கொளு:

செரு வேலோன் திறம் நோக்கிப்
பிரிவுஇன்றி பேய் ஓம்பின்று.

போர்க்களத்தில் விழுப்புண் பட்டு கிடந்த காஞ்சி வீரனின் வீரத்தைக் கண்டு வியந்த பேய் ஒன்று அவனைப் பிரியாது காத்தலாகும்.

பேய்க்காஞ்சி:

போர்க்களத்தில் விழுப்புண் பட்டு கிடப்பவனை பேய் ஒன்று அச்சப்படுத்துவது பேய்க்காஞ்சி என்னும் காஞ்சித் துறையாகும்.

கொளு:

பிணம் பிறங்கிய களத்து வீழ்ந்தார்க்கு
அணங்கு ஆற்ற அச்சுறீஇ யன்று.

பிணங்கள் நிறைந்துக் கிடக்கும் போர்க்களத்தில் விழுப்புண் பட்டு கிடக்கும் காஞ்சி வீரனை பேய் ஒன்று அச்சுறுத்தலாகும்.

ஆ). படைவழக்கு வகைகளை விவரி.

தன் வீரர்களுக்கு காஞ்சி மன்னன் படைக்கலன்கள் வழங்குதல் அவற்றை வீரர்கள் புகழ்ந்துரைத்தல்.

கொளு:

முத்து அவர் பூண்மற வேந்தன்
ஒத்தவருக்கு படைவழங்கின்று

முத்து மாலையை அணிந்த காஞ்சி வேந்தன் இனமொத்த படைவீரர்களுக்கு படைக்கலன்களை வழங்குதலாகும். காஞ்சி மன்னன் அளித்த படைக்கலன்களின் பெருமையை படைவீரர்கள் போற்றிக் கூறுவது படைவழக்கு என்னும் காஞ்சித் துறையாகும்.

கொளு:

கொடுத்த பின்னர் கழல் மறவர்
எடுத்து உரைப்பினும் அத்துறையாகும்.

காஞ்சி மன்னன் கொடுத்த படைக்கலன்களின் பெருமைகளை வீரக்கழல் அணிந்த வீரர்கள் கூறுதலுமாகும்.

15.அ) மகள் மறுத்து மொழிதல் பற்றி விளக்கி வரைக.

உழிஞை வேந்தன் நொச்சி மன்னனின் மகளை பெண் கேட்கக் கொடுக்க மறுப்பது மகள் மறுத்து மொழிதல் என்னும் நொச்சித்துறையாகும்.

கொளு:

வெம்முரணான் மகள் வேண்ட

அம்மதிலோன் மறுத்து

நொச்சி மன்னனுடன் முரண்பட்ட உழிஞை வேந்தன் பெண் கேட்க அவன் மறுத்துக் கூறுதலாகும்.

ஆ) மறனுடை பாசி பற்றி தொகுத்து எழுதுக.

மதிலைக்காக்க நொச்சி வீரர்கள் போராடி சொர்க்கம் புகுதல்.

கொளு:

மறப்படை மறவேந்தர்

துறதீதத்துச் செலவு உரைத்தன்று.

வீரமிக்க நொச்சி படைக்கு தலைவனான நொச்சிப்படை மன்னன் உழிஞையருடன் நடந்த போரில் மாண்டு சுவர்க்கம் சென்றதை உரைத்தலாகும்.

## <u>பகுதி–இ</u>

<u>எவையேனும் மூன்று வினாக்களுக்கு விடையளி</u>

16. வெட்சித்திணை துறைகளை விளக்கி வரைக.

வெட்சிப்படலம்:

ஆநிரைக் கவர வெட்சிப்பூவை சூடுவதாகும்.

வெட்சிப்படலத்துறைகள்:

1. வெட்சி அரவம்:

வெட்சிப்பூவைச்சூடி முழக்கத்துடன் ஆநிரை கவரப்போதல்,

2. வரிச்சி:

செல்லும் இடத்தின் விளைவு குறித்து பிறர் வாய்ச்சொல் கேட்டல்.

3. செலவு:

ஆநிரைக் கவர செல்லுதல்

4. வேய்:

ஒற்றர் வழி நிலமையை அறிந்து கொள்ளுதல்.

5.புறத்திரை:

ஆநிரை கவரச்சென்ற இடத்து பகைவரை சூழ்ந்துக்கொள்ளுதல்.

6. ஊர்கொலை:

ஆநிரை கவரச்சென்ற மறவர், காவல்நின்ற பகைநாட்டு மறவரை அழித்தல்.

7. ஆகோள்:

பகைவரை அழித்து ஆநிரைக் கவரந்து வருதல்

8. பூசல்மாற்று:

ஆநிரைக்கு உரிய நாட்டவர் மீட்க வந்தபோது போரிட்டுத் துறத்துதல்

9. சுரத்து உய்த்தல்:

வழியில் சோர்வடையா வண்ணம் ஆநிரைகளை கொண்டு செல்லுதல்.

10. தலைத்தோற்றம்:

ஆநிரைகளை ஊர்புறம் கொண்டுவருதல்.

17.காஞ்சிப்படலத்திணையையும் துறைகளையும் விளக்குக.

காஞ்சிப்படலம் :

நாட்டை கவர வஞ்சிப்பூ சூடி வந்தவரை காங்சிப்பூ சூடி எதிர்த்துப் போரிடுவது ஆகும்.

காஞ்சிபடலத்துறைகள்:

1. காஞ்சி அதிர்வு:

தங்கள் நாட்டைக் கவர வஞ்சி வேந்தன் வருவது அறிந்து நம் அதிர்வை வெளிப்படுத்துதல்

2. தழிஞ்சி :

தம் நாட்டைக் கவர வந்த வஞ்சி மறவரைப் காஞ்சி வீரர் தடுத்தல்.

3. படை வழக்கு:

தன் வீரர்களுக்க காஞ்சி மன்னன் படைக்கலன்கள் வழங்குதல் அவற்றை வீரர்கள் புகழ்துரைத்தல்.

4. வருங்காஞ்சி:

வஞ்சி மறவரை எதிர்த்து காஞ்சி வீரர் தம் ஆற்றலை வெளிப்படுத்துதல்.

5. வாள்செலவு:

காஞ்சி மன்னனின் வாள் போர்க்களம் கொண்டு செல்ல நேர்ந்ததை விளக்குதல்.

6.குடை செலவு:

காஞ்சி மன்னன் தன்னுடைய வெண்கொற்றக் குடையை புறவீட்டுக்கு அனுப்புதல்.

7. வஞ்சினக்காஞ்சி:

வங்சி வேந்தனை புறமுதுகிட செய்ய காஞ்சி மன்னன் சீற்றம் கொள்ளுதல்.

8. பூக்கோள்நிலை:

வஞ்சிப் படையுடன் போரிடக் காஞ்சி மன்னன் தன் வீரர்களுக்குச் சூடிக்கொள்ள காஞ்சிப்பூ அளித்தல்.

9. தலை காஞ்சி:

வஞ்சி மறவருடன் நேரிட்ட போரில் இறந்துபட்ட காஞ்சி வீரனைப்பாராட்டுதல்.

10. தலை மாராயம்:

வஞ்சி வேந்தர் கவராதவாறு களத்தில்பட்ட காஞ்சி வீரன் தலையை இன்னொரு வீரன் கொண்டுவந்த கொடுத்து மன்னனிடம் பரிசு வெறுதல்.

18. உழிஞைப்படலத்திணையையும் துறைகளையும் விளக்குக.

உழிஞைப் படலம்:

மதிலைக் கவருவதற்காக நல்ல நாள் பார்த்து வாளை புறவீடு அனுப்புதல்

குடைநாட்கோள்:

மதில் கவர விரும்பிய உழிஞை வேந்தன் நல்ல நாள் பார்த்து வாளை புறவீடு அனுப்புதல்.

வாள்நாட் கோள்:

மதில் கவர நல்ல நாள் பார்த்து வெண்கொற்றக் குடையை புறவீடு அனுப்புதல்.

முரச உழிஞை:

மாற்றார் மதிலைக் கவர எண்ணிய உழிஞை மறவர் முரசை வழிபடுதல்.

கொற்ற உழிஞை:

மாற்றார் மதிலைக் கவர உழிஞை வேந்தன் படையொடு வெல்லுதல்.

அரச உழிஞை:

மாற்றாரின் மதிலை கவரச்செல்லும் உழிஞை வேந்தனின் புகழைச் சொல்லுதல்.

கந்தழி:

உழிஞை வேந்தனை கண்ணபிரானோடு ஒப்பிட்டு விளக்குதல்.

முற்றுழிஞை:

முப்புறம் எரிக்க உழிஞைப் பூவைச்சூடிய சிவபெருமானின் சிறப்பை விளக்குதல்.

காந்தல்:

முருகக்கடவுள் சூடியுள்ள காந்தல் மலரின் பெருமையை உரைத்தல்.

புறத்திறை:

மாற்றாரின் மதில் கவரச் சென்ற போது மதிலுக்குப் புறத்தே மாடிவீட்டிலிருந்ததைக் கூறுதல்.

ஆரெயில் உழிஞை:

நொச்சியாரின் மதிலின் இயல்பைப்பற்றிக் கூறுதல்.

19. வாகைப்படலத்தின் திணையும் துறைகளையும் விளக்கக:

வாகைப்படலம்

போரிட்ட வேந்தர்களின் வெற்றி பெற்றவர் வாகைப்பூவைச சூடிக்கொள்வதை விளக்குவதாகும்.

வாகைஅரவம்:

வெற்றி பெற்ற வேந்தரும், மறவரும் வாகைப்பூவைச்சூடி ஆரவாரம் செய்தல்.

அரசவாகை:

பகைவரை அழித்து வாகைச்சூடிய வேந்தனது சிறப்பைக் வறுதல்.

முரசவாகை:

வாகை சூடிய வேந்தனது முரசின் சிறப்பை எடுத்துக்கூறுதல்.

மரக்கள வழி:

வில் ஏர் உழவனாகிய வாகை வேந்தனை உழவனாக உயர்த்திக்கூறுதல்.

களவேள்வி:

வாகை வேந்தனின் போர்தொழிலின் சிறப்பை எடுத்துக்கூறுதல்.

முன்தேர்க் குரவை:

வாகை வேந்தனின் வெற்றியைத் தொடர்ந்து அவன் தேரின் முன் பேய்கள் புரவையாடுதல்.

20. பாடாண் படலத் திணை துறைகளை விளக்கி எழுதுக.

படாண் படலம்:

பாடப்படும் ஆண்மை மிக்கோரின் ஒழுகலாறுகளை விளக்குவது ஆகும்.

வாயில்நிலை:

பாடாண் வேந்தனிடம் பரிசில் பெற வந்த ஒருவன் தன் நிலையைப் பற்றிக்கூறுதல்.

கடவுள் வாழ்த்து:

நாட்டைக்காக்கும் வேந்தன் தொழும் கடவுளர்களில் ஒருவரை உயர்த்திக் கூறுதல்.

பூவை நிலை:

காயாம்பூவினை போற்றிக்கூறுதல்.

பரிசில்துறை:

பரிசில் வேண்டுவோன் வேந்தனிடம் தான் வேண்டுவதகைக் கேட்டல்.

இயல்மொழி வாழ்த்து:

வேந்தனின் முன்னோர் கொடுத்த பரிசினைக் கூறுதல். இந்த வேந்தனின் இயல்பைக் கூறுதல்.

கண்படை நிலை:

போரில் வென்ற பாடாண் வேந்தனின் துயில்நிலையை எடுத்துக்கூறுதல்.

துயில் எடை நிலை:

பாடாண்வேந்தனை துயிலிலிருந்து எழுப்புவதை விளக்குதல்.

மங்கல நிலை:

திறை செலுத்த வந்த மன்னர்கள் பாடாண் வேந்தனை வழங்குதல். வேந்தன் போருக்குப் பிறகு பெற்ற சிறப்புகளைக் கூறுதல்.

விளக்கு நிலை:

பாடாண் வேந்தனின் திருவிளக்கின் பெருமைக்கூறுதல். வேந்தனை கதிரவனோடு ஒப்பிடுதல்.

கபிலை கண்ணிய புண்ணிய நிலை:

பாடாண் வேந்தன் வழங்கிய பசுக்களின் சிறப்பினைக் கூறுதல்.

அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி

வகுப்பு : இளங்கலை தமிழ், மூன்றாம் ஆண்டு
III BA TAMIL

பாடம் : கல்வெட்டியல்

பாட எண் : 16AMBETA3

பகுதி - அ
2 MARK :

1. தமிழ் எழுத்துக்கள் என்றால் என்ன ?

* சங்க காலத்தில், தமிழ் மொழிச் சொற்களை எழுதுவதற்குப் பயன்படுத்தப்பட்ட எழுத்துக்களைத் தமிழ எழுத்துக்கள் எனலாம்.

2. வட்டெழுத்து என்றால் என்ன ?

* தமிழ் மொழியை எழுதுவதற்குப் பயன்படுத்தப்பட்ட வட்டவடிவ வரிவடிவங்களை மிகுதியாகக் கொண்ட இவ்வகை எழுத்துக்களையே வட்டெழுத்துக்கள் என்பர்.

3. உயர்ச்சொல் என்றால் என்ன ?

நிலக்கொடை